[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 1

அந்தக் குறிப்பிட்ட பத்திரிகை நல்ல தரமான பத்திரிகை என்று பேரெடுத்த பத்திரிகைதான். பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் ஒரு தரப்பினரை மட்டும் பார்த்து இருப்பதை எழுதிவிடாமல், அரசு தரப்பில் என்னிடமோ அல்லது என்னுடைய செயலாளரிடமோ அல்லது தலைமைச் பொறியாளரிடமோ கேட்டிருப்பார்களேயானால் உண்மையான விளக்கம் கிடைத்திருக்கும். பத்திரிகை நடத்துபவர்கள் அரசினுடைய செயல்களைப் பற்றி விமர்சிக்கவும், கண்டிக்கவும் உரிமைப் பெற்றவர்கள். அது அவர்களுடைய சுதந்திரம். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒரு தரப்பில் இருப்பதை மட்டும் கேட்டுவிட்டு மற்றவர்களை கேட்காமல் வெளியிடுவது நியாயம் அல்ல.

(மணி அடிக்கப்பட்டது).

(7) அறிக்கை அளித்தல்.

அரசு பதிவுபெறா அலுவல்களின் சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது 82—வது விதியின் கீழ்மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் அளிக்க விருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், என்.ஜி.ஓ.வினரின் ஸ்டிரைக் பற்றிச் சொல்லி, என்.ஜி.ஓ.வினரின் சங்கத் தலைவர்களை என்றைக்குச் சந்திக்கப்போகிறார் முதலமைச்சர் என்று இன்றைக்கு பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் கூறிய போது நாளை மானியக் கோரிக்கை நடைபெறவிருக்கிறது, அதை முடித்ததற்கு பிறகு முதல் அமைச்சர் அவர்கள் கலந்துபேசுவார்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது முதல் அமைச்சர் அலுவலகத்தில் இருந்து எனக்கு தகவல் வந்திருக்கிறது. என்.ஜி.ஓ.வினரைச் சேர்ந்த சங்கத் தலைவர்களுக்கு முதல் அமைச்சர் அவர்களின் சார்பாக அவருடைய செயலாளர் கடிதம் எழுதி யிருக்கிறார். சிவஇளங்கோ போன்ற தலைவர்களுக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த கடிதத்தை மட்டும் உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

With reference to your letter, dated 16-4-79 I am to add that due to pressing official preoccupations, the Hon. Chief Minisier is not in a position to meet your Association's representatives to day or in the next two or three days. It will suit the covenience of the Hon. Chief Minister if representatives of our association could meet him on 22-4-79 at 5 P. M.